www.nilafrance.com

# நிலா

இது ஓர் இலவச வெளியீடு
(மூவாயிரம் பிரதிகள்)

ஆடி - ஆவணி 2011 | இது கிருஷ்ணா அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 10








### உள்நாட்டமைச்சரின் வாதங்கள்
## வெளிநாட்டவர்களுக்கு பாதகமாக அமையுமா?

**வெ**ளிநாட்டவர்கள் செய்துவரும் தொழில்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதற்குச் சட்டத்திருத்தம் கொண்டுவரப் போவதாக உள்துறை அமைச்சர் Claude Guéant கூறியுள்ளார். பிரான்சில் தொழில் செய்யும் 20 000 வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையை இந்த ஆண்டு 18 000 ஆகக் குறைப்பதற்காக இந்நாட்டில் ஐரோப்பியரல்லாத வெளிநாட்டுக்காரர் ஒரு 30 வகையான தொழில்களைப் புரிவதற்காக சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

" மேற்படி குறிப்பிடப்படும் 30 தொழில்களைச் செய்வதற்காக இந்த வருடம் 3700 தொழிலாளர்கள் பிரான்சுக்கு சட்டரீதியாக வந்திருக்கிறார்கள் என தொழிலாளர் சங்கங்களில் ஒன்றான CGT தெரிவித்திருக்கும் வேளையில், வெளிநாட்டு மேசன்கள், உணவகச் சர்வர்கள் இந்நாட்டுக்குத் தேவையில்லை" என அமைச்சர் கூறியிருக்கிறார்.



இவ்வாறு தொழில்களை அரைவாசியாகக் குறைப்பதனால், குறைவான தொழில்கள், குறைவான வெளிநாட்டுத் தொழிலாளர்கள், வேலை இல்லாதவர்கள் தொகை குறைவடைவதோடல்லாமல் வதிவிடப்பத்திரங்களின் எண்ணிக்கையும் குறையும் என்கிறார் அமைச்சர். இவருடன் தொழில் அமைச்சரான Xavier Bertrand உம் கைகோர்த்துச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்போவதாக தெரிவிக்கப் படுகிறது.

பிரான்சில் படித்து சான்றிதழ் இல்லாமல் படிப்பை இடையில் விடும் மாணவர்களில் மூன்றில் இரண்டு பேர் வெளிநாட்டவர்களின் பிள்ளைகள் என அண்மையில் இந்த அமைச்சர் தகவல் தெரிவித்தமையை, INSEE இயக்குனர் மற்றும் Libération பத்திரிகை மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.எஸ்)




**ச**மூகக் கொடுப்பனவுகளில் (Allocations Familiales) மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ள சூழ்நிலையில் 2009 இற்கும் 2010 இற்கும் இடையில் 10% மோசடிகள் கூடியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2009 இல் 11 733 ஆக இருந்த தொகை 2010ம் ஆண்டில் 13 114 ஆக உயர்ந் துள்ளது. இவ்விடயம் தொடர்பாக 11 பக்க அறிக்கையை சமூக கொடுப் பனவுத் திணைக்களம் வெளி யிட்டுள்ளது.

2009 இல் பலர் தவறான தகவல்களை வழங்கி 500 மில்லியன் யூரோக்களுக்கு மேல் சமூகக் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளனர். எனினும் 90% ஆன பணம் திரும்பப்பெறப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 ம் ஆண்டில் 11 மில்லியன் குடும்பத்தலைவர்களுக்கு 60 மில்லியாட் யூரோக்கள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகச் சமூகக் கொடுப்பனவுத் (Allocations Familiales) திணைக்களம் தெரிவித்துள்ளது. (YB)



## கிருஷ்ணா அச்சகம்

தரம் - குறித்த தவணை - நியாயவிலை

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்,
மொழிபெயர்ப்பு தேவைகளுக்கும் நாடுங்கள்!

☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25

E-mail: krishnafrance@yahoo.com



73, Rue Doudeauville - 75018 PARIS (Métro : Château Rouge)

# Vélib
## நான்கு ஆண்டுகால சேவையில் 10 கோடி பேர் பயணம்...



«வெலிப்» (Vélib) என அழைக்கப்படும் சைக்கிள் பிரயாணம் பாரிஸில் 7 -ஆனி 2007 இல் ஆரம்பிக்கப்பட்டது. பயணிகளை துவிச்சக்கர வண்டிகள் மூலம் பயணிக்கச் செய்வதற்கான முயற்சிகளை பாரிஸ் நகரசபை மேற்கொண்டிருந்தது. சைக்கிள்களை வாடகைக்கு விடுவதற்காக ஆட்களை நியமிக்காமல் சுய - சேவை (Libre - Service / Self -Service) மூலம் திட்டத்தை நகரசபை நடைமுறைப் படுத்தியது. தற்போது நான்கு ஆண்டுகால சேவையில் 10 கோடி (100 மில்லியன்) பேர் «வெலிப்» சேவையில் உள்ள சைக்கிள்கள் மூலம் பயணம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிசிலும் பாரிசுக்கு அண்மித்த 30 நகரங்களிலும் இச்சேவை தற்போது உள்ளது. சேவை ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு சைக்கிளும் 8000 இற்கு மேற்பட்ட தடவைகள் பாவிக்கப் பட்டுள்ளதாகவும், சராசரியாக 16 000 கிலோமீற்றர் தூரம் ஓடியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தூரம் பிரான்சின் தலைநகர் பாரிசிற்கும் வியட்நாம் தலைநகர் சைகோனுக்கும் (Saigon) இடைப்பட்ட தூரமாகும்.

இந்த சைக்கிள் பயணம் எடை கூடியவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் «வெலிப்» பாவனையின் மூலம் இந்த நான்கு ஆண்டு காலப் பகுதியில் 40 000 தொன் எடையுள்ள காபனீரொட்சைட்டு ($CO_2$) காற்றில் கலவாமல் சுற்றுச் சூழல் பேணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(YB)



## மகளிர் கால் பந்து ஜப்பான் சாம்பியனானது.

உலகக்கோப்பை 2011 மகளிர் கால்ப்பந்துப்போட்டி இறுதி ஆட்டத்தில் ஜப்பான் அமெரிக்க அணிகள் மோதின. சமநிலையில் ஆட்டம் முடிவடைந்த நிலையில் இறுதியாக பனால்டி உதை மூலம் வெற்றிபெறும் வாய்ப்பு இருஅணிக்கும் வழங்கப்பட்டது. இதில் ஜப்பான் அணி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இத்தொடரில் பிரெஞ்சு அணியும் முதற்தடவையாக அரைஇறுதிக்கு முன்னேறியது குறிப்பிடத்தக்கது.

(Mn)








## நீங்கள் ஆகாயத்தில் பறந்தபடி உலகை ரசிக்கலாம்!

எதிர்காலத்தில் கண்ணாடிக் கூரையுள்ள விமானங்களை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்படுகின்றது. இவ் விமானத்தின் இருக்கைகளில் இருந்து பயணிகள் மேல் பக்கத்தாலும் பக்கவாட்டிலும் ஆகாயத்தைப் பார்க்க முடியும். ஆனால் இவ்வாறான விமானங்களில் பயணிக்க 2050 ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டும். எயார்பஸ் (Airbus) விமான நிறுவனமே இந்த நீண்டகாலத் திட்டத்தை அமுல்படுத்த முனைகின்றது.

(YB)


நிலா
www.nilafrance.com
நிலா பற்றிய
உங்கள் அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகளுக்கு
சங்கீதா அச்சகம்
லாச்சப்பல்

புதிய வயலின் வகுப்புகள் ஆரம்பமாகின்றன!



‘நாதாலயம்’

ஆசிரியர் : தேவராஜா மயில்வாகனம்

தொடர்புகளுக்கு : 01 39 86 04 84 / 06 85 14 92 15
E-mail : mylthe@wanadoo.fr



## சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தலைவராக கிறிஸ்ரீன் லகார்(த்)

சர்வதேசநிதியத்தைப்பற்றியும் அதன் தலைவர் டி.எஸ்.கே. பற்றியும் ஒரு விரல்சூப்பும் குழந்தையைக் கேட்டால் கூட தெரியுமளவுக்கு பிரபல்யமாகிப்போன செய்திகள். நிதியத்தின் தலைவராக இருந்த ஸ்டிராஸ்கானின் மீதெழுந்த பாலியல் புகாரை அடுத்து அவர் பதவிவிலகநேர்ந்தது.

தொடர்ந்து ஐரோப்பாவின் ஆதிக்கத்துக்குள் இருந்த இத்தலைமைப்பதவிக்கு மறைமுகமாக கடும்போட்டிகள் நிலவின. இறுதியில் வெற்றிடமான பதவிக்கு மெக்ஸிகோ மத்திய வங்கி ஆளுநர் அகஸ்டின் கார்ஸ்டென்ஸ்ற்கும் பிரெஞ்சு நிதியமைச்சர் லகார்டேயுக்கும் இடையே கடும்போட்டியாக இருந்தது. எனினும் அமெரிக்கா, ரஷியா, சீனா, ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் பிரான்ஸ் நிதியமைச்சர் லகார்டே தேர்வு செய்யப்பட்டார். இதன் மூலம் இந்த அமைப்பின் முதலாவது பெண் தலைவர் என்கின்ற பெருமையையும் அவர் பெற்றுக்கொண்டார். யூலை 5ல் பதவிஏற்றுக்கொண்ட இவர் வாஷிங்டனிலுள்ள தலைமை அலுவலகத்திலிருந்து தொடர்ந்து 5 வருடங்கள் பணியாற்றுவார்.

(Mn)



## மீள் சுத்திகரிப்பிற்கான ஆராய்ச்சியில் குழந்தைகளின் கழிபொருள்தாங்கி

*(Couches)*

ஒரு குழந்தை தனது முதல் இரண்டு வயதிற்குள் ஏறத்தாள 6000 குஸ்சினை பயன்படுத்துகின்றது. இப் பாவனையினால் வருடத்தில் 10 லட்சம் தொன் மறு சுழற்சி இன்றி, சுற்றுச் சூழலுக்கு பாரிய விளைவை ஏற்படுத்துகின்றது.


இதனால் சிறப்பு நிதியம்அமைக்கப்பட்டு குஸ் மீள பயன்படுத்தும் ஆராய்ச்சி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

(PR)

**வரி இல்லாத சம்பளமாக**
**வருடாந்தம் 345 000 யூரோக்கள்**
**சாரதியுடன் கூடிய வாகனம் வழங்கப்படும்**
**எத்தனை தடவை வேண்டுமானாலும்**
**உலகம் முழுவதற்கும் அதிகார பூர்வ**
**பிரயாணங்கள் செய்யலாம்**
**பயணச்செலவு, ஹோட்டல் செலவு இலவசம்**
**இவற்றையெல்லாம் அனுபவிக்க**
**ஆசைப்படுகிறீர்களா?**
**பேசாமல் சர்வதேச நாணய நிதியத்தின்**
**தலைவராகிவிடுங்கள்!**

(YB)

## இலங்கைக்கு நீங்கள் 2மணிநேரத்தில் பறக்கலாம்!



*4800 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் புதிய விமானம் பாரிஸ் விமான கண்காட்சியில் அறிமுகமாகியுள்ளது. இவ் விமானத்தின் பரீட்சார்த்த ரீதியான பறப்பு, பரிசோதனைகள் அடுத்த 10 ஆண்டில் நடைபெற உள்ளது. இது இலங்கைக்கு இரண்டு மணி நேரத்தில் சென்றுவிடும்.*

பிரான்ஸ் ஏர்புஸ் நிறுவனத்தின் தயாரிப்பான இந்த புதிய விமானம் மணித்தியாலத்துக்கு 4800 கிலோமீற்றர் உயர் வேகத்தில் பறக்கக் கூடியது. இந்த விமானம் தன் கழிவாக நீரை வெளியிடும் அதேநேரம் நைதரசன் மற்றும் ஒட்சிசன் மூலம் இயங்க உள்ளது. மூன்று எஞ்சினைக் கொண்டு இயங்கவுள்ள இந்த விமானம், சத்தம் குறைந்தது. அத்துடன் ஒலியை விட 4 மடங்கு வேகத்தில் செல்லும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இப்போ பிரச்சினை என்னவென்றால் இதை நீங்கள் அனுபவிப்பதற்கு 2050 வரை காத்திருக்கவேண்டும். முடியுமா உங்களால்....!

(PR)


EXACT EXCHANGE




BUREAU DE CHANGE

*Meilleurs Cours – Best Rates*

Tél. / Fax : 01 48 78 35 33

தங்க நாணயங்களை பெற்றுக்கொள்ள நாடுங்கள்

WESTERN UNION MONEY TRANSFER

123, Bd. de Magenta - 75010 PARIS (M°: Gare du Nord)



# பிரான்சிலும் 'பேப்பர் அவுட்!'



பிரான்சில் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள், தொழிற்துறைகள் போன்றவற்றுக்கான நுழைவுப் பரீட்சையாகப் பார்க்கப் படுகின்ற மிகவும் பிரபல்யமான BAC என அழைக்கப்படும் பரீட்சை ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் நடை பெறுவது வழக்கம். இப் பரீட்சைக்கு இவ்வருடம் 6 இலட்சத்திற்கும் மேற் பட்ட மாணவர்கள் தோற்றியிருந்தனர். இதில் விஞ்ஞானப் பிரிவின் கணிதத்திற்கு 1,65 000 பேர் பரீட்சை எழுதினர். இவர்களுடைய கணித வினாத்தாளின் ஒரு பகுதி பரீட்சையின் முதல் நாள் இரவு 9 மணியளவில் jeuxvideo.com என்ற இணையத் தளத்தில் வெளியானது. அடுத்தநாள் அதாவது பரீட்சை நாளன்று இணையத் தளத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

நான்கு மணிநேரம் நடைபெற்ற நான்கு கணக்குகளைக் கொண்ட விஞ்ஞானப் பிரிவின் விசேட கணித வினாத்தாளின் முதலாவது கணக்கு முழுதாகப் படம் பிடிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் இந்தப் பரீட்சையை மீண்டும் நடாத்துவது இல்லை என்று கல்வி அமைச்சு முடிவெடுத்துள்ளது. எனவே இந்த கேள்வி புள்ளியிடுதலில் இருந்து நீக்கப்பட்டு மற்றைய 3 கணக்குகளுக்கு மாத்திரம் 20 புள்ளிகளுக்கு தரம் இடப்பட்டுள்ளன. பரீட்சையில் சித்தி யடைய 10 புள்ளிகள் எடுக்க வேண்டியதற்கு 9 புள்ளிகள் இம்முறை போதுமானது என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் குற்றம் செய்தவர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனையும் 9000 யூரோக்கள் தண்டப் பணமும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தளத்தில் வெளியிட்ட மைக்காக 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சின் உள்வேலையே கேள்வித்தாள் வெளியானமைக்குக் காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் தண்டனை மிகவும் கடுமையானதாக இருக்கும் என்று கல்வி அமைச்சர் லுக் சத்தல் (Luc Chatel ) தெரிவித்துள்ளார்.

(YB)



# பாரிசில் இளையோர் வன்முறை அதிகரிப்பு

*2010 முதல் 5 மாதத்தினுள் ஒப்பிடும் போது, 2011 இல் 18 வயதுக்கு உட்பட்டோரின் வன்முறை பாரிசில் 19.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 1996-2011 பாரிசில் நடந்த வன்முறையில் அரைவாசி, 18 வயதுக்கு உட்பட்டோரால் செய்யப்பட்டது. வன்முறைக்கான வயது 12-13 வயதில் இருந்து தொடங்குவதாக அறிவித்துள்ளனர்.*

(PR)

நீ என்ன நினைக்கிறாயோ
அதுவாகவே ஆகிறாய்

நீ எதை அகத்தால்
பார்க்கிறாயோ அதுவே
புறமாக பரிணமிக்கிறது

உன் மனத்தின் உயரமே
உன் வாழ்க்கையின்
உயரம்

# அபூர்வ யூலை 5 வெள்ளி சனி ஞாயிறு

உலகின் பெரும்பாலான நாடுகளில் சனி, ஞாயிறு நாட்கள் அரச விடுமுறை நாட்களாக உள்ளன. இவ்வாறே பல தனியார் நிறுவனங்களும் சனி, ஞாயிறு நாட்களில் விடுமுறை அளிக்கின்றன. வேலைப் பழுவில் இருப்போர் ஒவ்வொரு மாதமும் எத்தனை சனி, ஞாயிறு தினங்கள் ஒரு மாதத்தில் வருகின்றன என்பதை அவதானிப்பர். கோடை விடுமுறை செல்வோர் இன்னும் கவனமாக இதைப் பார்ப்பார்கள்.

2011 ம் ஆண்டில் 5 ஞாயிற்றுக்கிழமை வரும் மாதங்கள் நான்கும், 5 சனிக்கிழமை வரும் மாதங்கள் ஐந்தும் வருகின்றன. இவ்வாறே இந்த ஆண்டில் 5 வெள்ளிக்கிழமை வரும் மாதங்கள் நான்கும் வருகின்றன. ஆனால் இவ்வருட யூலை மாதத்தில் அபூர்வ நிகழ்வாக 5 வெள்ளிக் கிழமைகள், 5 சனிக்கிழமைகள், 5 ஞாயிற்றுக் கிழமைகள் வந்திருக்கின்றன.

அடுத்து இந் நிகழ்வு எப்போது வரும் என்று கணித்துப்பாருங்கள். கணிப்பதற்கு கஸ்ரமாக இருக்கின்றதா? இந்த அபூர்வ நிகழ்விற்காக நீங்கள் 823 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

(YB)


## ருபி அச்சகம்

உங்கள் மழலைகளின் வண்ண வண்ண போஸ்ரர்கள், மற்றும் உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய போஸ்ரர்களை பதிப்பித்துக்கொள்ள எம்மை நாடுங்கள் !




10, RUE LABAT- PARIS 18
M°: Marcadet Poissonniers
Tél.: 01 42 51 80 78



# பிரான்சில் வாழும் மக்கள் அதிகளவு மருந்து பாவிக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளிலே கூடுதலாக மருந்து பாவிக்கின்ற நாடுகளில் பிரான்ஸ் முதலிடத்தில் உள்ளது. மருத்துவர்கள் தரும் தவறான ஆலோசனையும் மருந்துச்சீட்டுமே அதற்கான காரணம் என்று கூறப்படுகிறது.

பிரான்சில் ஒரு மனிதன் ஒரு வருடத்திற்கு மருந்திற்காக செலவிடும் தொகை 114 யூரோவாக உள்ளது. சுவிஸ் நாட்டில் 107 யூரோவும், ஸ்பெயின் நாட்டில் 94 யூரோவும் இத்தாலி நாட்டில் 90யூரோவும் கொலண்ட் நாட்டில் 71 யூரோவும் ஜேர்மனி நாட்டில் 70 யூரோவும் இங்கிலாந்து நாட்டில் 59 யூரோவும் வருடத்தில் மருந்திற்காக தனிநபர் ஒருவரால் செலவளிக்கப்படும் தொகையாக உள்ளது.

இவர்கள் கூடுதலாக பாவிக்கும் மருந்துகள் : Antidépresseurs, Tranquillisants, Anti ulcéreux, Anti cholestérol, Anti hypertension, Anti biotiques. இதற்காக அசுரன்ஸ் மலாதி (Caisse Nationale d'Assurance Maladie) எனும் நிறுவனம் 2009ம் ஆண்டு 8மில்லியாட் யூரோக்களை மக்களிற்கு மீளளிப்பு செய்துள்ளது. அதே வேளை பிரான்ஸ் மக்கள் மருந்து மாத்திரைகள், சிறப்ஸ், ஊசி போன்றவற்றை பயன்படுத்தியதற்காக 11.6 மில்லியாட் யூரோக்களை l'Assurance Maladie செலுத்தியிருக்கிறது.

கடந்த சில வருடங்களாக மக்களிடம் இருந்து பெறும் தொகையை விட கூடுதலான தொகையை இம் மருத்துவக் காப்புறுதி நிறுவனம் மீள ளிப்புச் செய்து கொண் டிருந்தது. அதனால் மக்க ளிடம் தேவையற்று வாங்கும் மருந்துகளை குறைக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். தற்போது அதை மக்கள் மதித்து செயற் படுகின்றனர் என்கிறது காப்புறுதி நிறுவனம் .

அதே வேளை மாத்திரையின் கணக்கு பார்க்கும் போது ஒரு மனிதன் ஒரு வருடத்திற்கு எத்தனை மருந்து பாவிக்கின்றான் என்று பட்டியலிட்டபோது, பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகள் 382 மருந்தினை பாவிக் கின்றனர். பிரித்தானிய நாட்டில் 456 மருந்தினையும் ஜேர்மன் நாட்டில் 329 மருந்தி னையும் பாவிக்கின்றனர்.

(Aji)



# மோனலீசாவை தரமாட்டோம் பிரான்ஸ் மறுப்பு.

ஒன்றல்ல, இரண்டல்ல ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு மோனலிசா சிந்தினாலும் சிந்தினார் ஒரு மந்திரப் புன்னகையை. அது இன்று வரை உலகையே ஆட்டிக் கொண்டிருக்கிறது.

இத்தாலிக்குச்சொந்தமான இவ் அழகோவியம் பிரான்ஸ் லூவர் அருங்காட்சியகத்தில் பார்ப்போரை மயக்கியபடி அமைதியாக இருக்கிறது.

இது இப்படியாக இருக்க, வருகிற 2013ம் ஆண்டு இத்தாலியில் ஒரு உலக ளாவிய ஓவியக் கண்காட்சி நடைபெறுகிறது. இந்தக்கண் காட்சியில் மோனலிசாவின் இந்த ஓவியமும் காட்சிப் படுத்தவேண்டுமென்பது பலரது வேண்டுகோள். இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள பிரான்ஸ் மறுத்து விட்டது.

ஓவியர் லியனாடாவின்சியால் 16ம் நூற்றாண்டின் ஆரம்பத தில் வரையப்பட்ட இவ் ஓவியம் தற்போது பாதிப் படையும் நிலையிலுள்ளது.

நீண்டதூரத்திற்கு இதை எடுத்துச்செல்வது ஓவியத்தை மேலும் பாதிப்படையச் செய்யும் என அதன் பராமரிப் பாளர்கள் அஞ்சுகின்றனர். 1963ல் அமெரிக்காவிற்கும், 1974 ல் ஜப்பானிற்கும் இவ் ஓவியம் பயணம் செய்து ஏற்பட்ட பாதிப்பு பற்றியும் மேலும் எடுத்துரைக்கின்றனர். 1911ல் இந்த மோனலிசா ஓவியம் திருட்டுப்போன சம்பவம் ஒன்று நடந்து தானிருக்கிறது. பின்னர் 1913ல் கண்டுபிடிக்கப்பட்டு லூவர் காட்சியகத்ததில் மீண்டும் காட்சிப்படுத்தப்பட்ட தாகவும் அறியமுடிகிறது. (Mn)




**MAHARAJAH EXOTIQUE**

*Alimentation Générale*

இலங்கை. இந்திய மளிகைப்பொருட்கள் அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**5, Rue Lefebvre - 77130 Montereau-Fault-Yonne**

**Tél.: 09.52.67.97.87 / 07.60.36.01.27**


# துயர் பகிர்வு



தோற்றம்: 19.08.1948
மறைவு: 30.06.2011

அமரர் குமரேசபிள்ளை வீரசிங்கம்



தோற்றம்: 01.05.1930
மறைவு: 22.05.2011

அமரர் கந்தையா வன்னியசிங்கம்



தோற்றம்: 07.10.1967
மறைவு: 17.05.2011

அமரர் பரமநாதன் சிறிஸ்கந்தராஜா



தோற்றம்: 19.07.1948
மறைவு: 22.05.2011

அமரர் சபாரட்ணம் மின்னலாதேவி



தோற்றம்: 21.01.1919
மறைவு: 14.06.2011

அமரர் தம்பிமுத்து மயில்வாகனம்



தோற்றம்: 24.12.1972
மறைவு: 20.07.2011

அமரர் பாலசுந்தரம் செந்திலன்



தோற்றம்: 14.03.1937
மறைவு: 23.07.2011

அமரர் கனகரட்ணம் இலட்சுமி



தோற்றம்: 07.04.1965
மறைவு: 25.07.2011

அமரர் பூவலிங்கம் யோகராணி



# கடந்த ஒரு வருடத்தில் பாரிஸில் 7299 களவுகள்!

கடந்த 12 மாதங்களில் பாரிஸ் மாகாணத்தில் களவுகள் ஐந்தில் ஒரு பங்கிற்கு கூடுதலாக அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ONDRP என்ற குற்றச் செயல்களை அவதானிக்கும் அமைப்பு விபரமாகத் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

தங்கள் வீடுகளை பூட்டிவிட்டு கோடை விடுமுறைக்காகச் செல்கின்ற வேளைகளில் கூடுதலான வீடுடைப்பும் களவும் இடம்பெறுகின்றன. கடந்த ஒரு வருடத்தில் பாரிஸில் 7299 களவுகளும், செந் - தெனிஸ் மாவட்டத்தில் 6396 களவுகளும் இடம் பெற்றிருக்கின்றன. இம் மாவட்டத்தின் எப்பினே - சூர் - சென் (Epinay-sur-Seine) என்கின்ற நகரம் 166% உயர்வால் களவுகளில் முன்னணியில் உள்ளது.

களவெடுக்கப்பட்ட பொருட்களில் - நகைகளின் பெறுமானம் சராசரியாக 6500 யூரோக்களாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தங்கத்தின் விலை 50% ஆல் உயர்வடைந்தமைதான் களவெடுக்கப்பட்ட பொருட்களின் விலை இப்படியாக அதிகரிக்க காரணமாக இருந்துள்ளது என ONDRP அமைப்பு தெரிவித்துள்ளது.

சீருடையில் இல்லாத பொலிசாரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளமையும் களவுகள் பல்கிப் பெருகக் காரணமாக அமைகின்றது. களவுகள் இவ்வாறு அதிகரிப்பதற்கு அடிப்படைக் காரணம் என்னவாக இருக்கும் என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பொலிஸ் ஆணையகம் பதிலளிக்க விரும்பவில்லை என ONDRP (Observatoire National de la Délinquance et des Réponses Pénales) அமைப்பு தெரிவிக்கின்றது.

(YB)



# பாரிஸ்-மொன்றோய் கட்டிடம் உடைந்து வீழ்ந்ததில் மூவர் பலி

பாரிசின் கிழக்கே அமைந்துள்ள (Montreuil) நகரில் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்த ஹோட்டல் ஒன்று 05.06.2011 அன்று இரவு 11.30 மணியளவில் உடைந்து ஓர் வீட்டின் மேல் வீழ்ந்துள்ளது. வீட்டில் உறக்கத்திலிருந்த தாயாரும், இரண்டு குழந்தைகளும் காயமடைந்து ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் ஆபிரிக்க நாடான மாலி நாட்டைச் சேர்ந்தவர்களாவர். ஒன்பது பேர் இருந்த வீட்டில் 5 பேர் கடுமையாகக் காயமடைந்தும் உள்ளனர்.

நான்கு மாடிக் ஹோட்டல் உடைந்து வீழ்ந்தபோது பக்கத்தில் இருந்த வீட்டின் மீதே வீழ்ந்துள்ளது. ஹோட்டல் உரிமையாளரும் பொலிசாரால் விசாரிக்கப்பட்டுள்ளதாக மொன்றியல் நகரபிதா டொமினிக் தெரிவித்துள்ளார். கட்டிடம் உடைந்து விழுந்து ஆட்கள் இறப்பது மிகவும் அபூர்வமானது என பொபினி (Bobigny) நீதவான் தெரிவித்துள்ளார். ஹோட்டலில் திருத்த வேலைகளைச் செய்த நிறுவனம் பெரு மளவு நஷ்டஈடு வழங்க வேண்டிய நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(YB)

## பாரிஸ்-தமிழர் நிகழ்வுகள்

- **நூல் வெளியீட்டு விழா**
கவிதாயினி லினோதினியின் 2 கவிதை நூல்கள் வெளியீட்டு விழா 11.06.2011 அன்று Bondyல் நடைபெற்றது.
- **நூல் வெளியீட்டு விழா**
எஸ். யோகரட்ணம் அவர்களின் *தீண்டாமைக்கொடுமையும் தீமூண்ட நாட்களும்* நூல் வெளியீட்டு விழா 03.07.2011 அன்று பாரிசில் நடைபெற்றது.
- **Ratha Yatra**
20 ஆவது Ratha Yatra நிகழ்வு 03.07.2011 அன்று பாரிசில் நடைபெற்றது.
- **தமிழர் விளையாட்டு விழா**
14வது தமிழர் விளையாட்டு விழா 03.07.2011 அன்று Le Bourget இல் நடைபெற்றது.
- **ஆண்டுவிழா-எவ்றி**
எவ்றி தமிழ் கலாசார மன்றத்தின் 5ம் ஆண்டு விழா 02.07.2011 அன்று எவ்றி இல் நடைபெற்றது.
- **ஆண்டு விழா-புளோமினில்**
புளொமினில் தமிழ்ச் சங்கம் தனது 9வது ஆண்டு நிறைவுவிழாவினை 02.07.2011 அன்று கொண்டாடி மகிழ்ந்தது.
- **குறளரங்கம்**
கம்பன் கழக மகளிர் அணியின் 12வது திருக்குறள் அரங்கம் 18.06.2011 அன்று Le Bourgetல் நடைபெற்றது.
- **தீராநதி**
பாரிஸில் தயாரிக்கப்பட்ட தீராநதி திரைப்படம் 09.07.2011 அன்று பாரிசில் திரையிடப்பட்டது.



## Gare du Nord இல் மோசடியான முறையில் விற்பனையாகும் பயணச் சீட்டுக்கள்



பாரிசில் முக்கிய புகையிரத நிலையங்களுள் கார்-டு-நோத் நிலையமும் ஒன்றாக உள்ளது. இந் நிலையத்தில் இருந்து பிரான்சின் வடபகுதி நகரங்களுக்கும் பெல்ஜியம், பிரித்தானியா நாடுகளுக்கும் புகையிரதங்கள் செல்கின்றன. அத்துடன் பாரிசின் முக்கிய விமான நிலையங்களுக்கும் புகையிரதங்கள் இந்த நிலையத்திலிருந்து செல்கின்றன.

சன சந்தடி மிக்க இந்த புகையிரத நிலையத்தில் டிக்கட் விற்பனை நிலையங்களை விட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள இளம் வயதினராலும் டிக்கட்டுகள் விற்பனை செய்யப்படுகின்றன. 20 - 25 வயதுடைய ஆண், பெண் இருபாலாராலும் காலையிலிருந்து பயணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

தானியங்கி இயந்திரத்தில் ஒருவர் டிக்கட் எடுக்க முற்படும் போது வெளியில் விற்பனை செய்யும் ஒருவர் டிக்கட் ஒன்றை விற்பனை செய்ய முயல்வார். சிலர் நம்பிக்கையீனத்துடன் வாங்காமல் விட்டுவிடுகின்றனர். ஆனால் வெளியில் டிக்கட் விற்பனை செய்பவர்கள் தொடர்ந்து முயற்சிக்கின்றனர் «நான் 10 டிக்கட் உள்ள «கார்னே» (Carnet) ஒன்று வாங்கி உள்ளேன் அதில் ஒன்றை விற்க உள்ளேன்» எனக் கூறுவார். அவசரமாக உள்ள பயணி ஒர் டிக்கட்டை 1 € 50 கொடுத்து வாங்கிச் செல்வார். டிக்கட்டைப் போட, இயந்திரம் வழிவிட பயணி புகையிரதத்திற்கு அல்லது மெற்றோவிற்குச் சென்றுவிடுகின்றார்.

இதில் எப்படி மோசடி செய்யப்படுகின்றது? 6 யூரோக்கள் கொடுத்து அரை டிக்கட்டை வாங்கி 60 சென்ரிமுக்குப் பதிலாக 1 € 50 இற்கு விற்பனை செய்கின்றனர். சில வேளைகளில் 3 யூரோவிற்கும் விற்பனை செய்கின்றனர். இவ்வாறே விமான நிலையம் செல்லும் அவசர பயணிகளுக்கு 8,70 யூரோவிற்கு வாங்கிய டிக்கட்டை 50 யூரோ வரை அவசரம் அறிந்து விற்றுவிடுகின்றனர். டிக்கட் பரிசோதகர்கள் சோதனை இடும் வேளைகளில் பிடிபடுபவர்கள் தண்டப்பணம் செலுத்துகின்றனர்.

SNCF, RATP ஆகிய இரண்டு நிறுவனங்களும் வெளியில் டிக்கட் வாங்க வேண்டாம் என்று பிரெஞ்சு, ஆங்கிலம், ஜேர்மன், ஸ்பெயின் மொழிகளில் அறிவித்தல் பலகைகளை வைத்துள்ளன. எனினும் சட்டத்திற்குப் புறம்பான டிக்கட் விற்பனை கொடிகட்டிப் பறக்கின்றது. இப்பிரச்சினைகளுக்கு 1995 இல் அரை டிக்கட் விற்பனை செய்யும் தானியங்கி இயந்திரங்கள் வாபஸ் பெறப்பட்ட பின்னரும் இவ் ஏமாற்று விற்பனையை பொலிசார் கட்டுக்குக் கொண்டுவரமுடியாமல் உள்ளனர் என்று விற்பனை நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

(YB)

## புதிதாக 25000 மீள் சுழற்சி சேகரிப்பு மையங்கள்



மின்சார மற்றும் எலற்றோனிக் உபகரணங்களின் மீள் சுழற்சிக்கு, புதிய மீள்சுழற்சி சேகரிப்பு மையங்கள் அறிமுகமாகி உள்ளன. இந்த வகையில் 25000 மையங்களை இதற்காக நிறுவ உள்ளனர். இதில் 19500 நிலையங்கள் இவ்வுபகரணங்கள் விற்பனை செய்யும் மையங்களிலும், 3900 நிலையங்களை சேகரிப்பு இடங்களிலும் நிறுவ உள்ளனர்.

இன்று வருடாந்தம் ஒரு நபர் சராசரியாக 16 முதல் 20 கிலோ மின்சார மற்றும் இலற்றோனிக் பொருட்களை பயன்படுத்தி வருகின்றார். இப் பொருட்களின் பயன்பாடு வருடாந்தம் 3 சதவீதத்தால் அதிகரித்து வருகின்றது. இதில் ஒரு நபருக்கு 6.5 கிலோ வீதமே (மொத்தமாக 4லட்சம் தொன்) மீள் சுழற்சிக்கு வருகின்றது. மிகக் குறைந்தளவே மீள் சுழற்சிக்கு வருவதால், சுற்று சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க, புதிய மீள் சுழற்சி சேகரிப்பு மையங்கள் அமைக்கப்படுகின்றது.

2005ம் ஆண்டு முதல் மீள் சுழற்சி செய்யக் கூடிய பொருட்களை விற்கும் போது, பழைய பொருளை கட்டாயம் மீள எடுக்க வேண்டும் என்ற சட்டம் அமுலில் உள்ளது. இதுபோல் புதிய பொருட்களை வாங்கும் போது, அப்பொருள் பயன்பாட்டுக்கான சுற்றுச் சூழல் வரி சட்டம் 2006 இல் இருந்து அமுலில் உள்ளது. இதன் மூலம் 2010 இல் 20 கோடி யூரோ சூழல் வரியாக திரட்டப்பட்டது.

(PR)

### படித்தது - பிடித்தது

உறவே! தற்காலிகமாகப்
பிரிவதானாலும் - ஒரு
மழைநாளில்
விடைபகிர்ந்துவிடு!
என் கண்ணீர்த்துளிகள்
உன்னைக் காயம்
செய்யாதிருக்கட்டும்!

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

உனக்குள் என்னைத்
தொலைத்துவிட்டு
எனக்குள் என்னைத்
தேடுகின்றேன்
பத்திரப் படுத்துகின்றேன்
என்றுவிட்டு - என்னைப்
பைத்தியமாக்கி விடாதே

- லினோதினி சண்முகநாதன்
(ஆத்மாவின் இராகங்கள் )

**விட்டுக்கொடுங்கள்** விருப்பங்கள் நிறைவேறும்
**தட்டிக் கொடுங்கள்** தவறுகள் குறையும்
**மனம்விட்டுப் பேசுங்கள்** அன்பு பெருகும்




# பெல்ஜியம் உடையுமா?

பெல்ஜியத்தில் கடந்த ஒரு வருடத்திற்குமேலாக குழப்பநிலை நிலவுகிறது.

பெல்ஜியத்தின் வடபகுதியில் வாழும் டச்சு மொழி பேசுவோருக்கும் தென்பகுதியில் வாழும் பிரெஞ்சுமொழி பேசுவோருக்கும் இடையில் மோதல் நிலவுகிறது.

பிரெஞ்சு மொழிபேசுவோருக்கு ஆதரவாகக் கைகொடுத்து பெல்ஜியத்தின் பாதிப்பகுதியை கையேற்க வேண்டுமென்கிறார் பிரான்சின் வலதுசாரி தேசியக்கட்சியின் தலைவர் மரின் லுபென். யூலை 21, பெல்ஜியத்தின் தேசியதினத்தன்று மரின் லுபெனின் இவ்வறிக்கை வெளிவந்துள்ளது. 1931 ல் பெல்ஜியம் நெதர்லாந்திடம் இருந்து விடுதலை பெற்றது.

(Mn)







7 ஆனி 1929 ம் நாளில் சர்வதேச அங்கீகாரத்துடன் தனி நாடாக அமைந்தது வத்திக்கான். றோம் நகரின் மத்தியில் அமைந்துள்ள இப் பிரதேசம் கத்தோலிக்க தேவாலயத்தின் கோரிக்கையின் படி 72 ஆண்டுகளின் முன்னர் பிரகடனப்படுத்தப்பட்டது. 44 ஹெக்ரர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதன் பாதுகாப்பு உட்பட்ட பல சேவைகளை இத்தாலி வழங்கி வருகின்றது.

(YB)

**ஒரு மனிதன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதுதான் பெருமை.**



## ஆச்சரியம்! ஆனால் உண்மை!!

பாரிசில் (Ile-de-France) 15000 விவசாயிகள் விவசாயம் செய்கின்றனர். இயந்திர மயமாக்கல் மற்றும் சேவை துறையால் மூழ்கடிக்கப்பட்ட பிரான்சின், தலைநகரில் 15000 விவசாயிகள் உள்ளனர் என்பது ஆச்சரியமான செய்திதான். மொத்தம் 583000 ஹெக்ரர் நிலத்தில் 5000 விவசாயிகளும், 600 கால்நடை வளர்ப்பாளர்களும் உள்ளனர். இந்த விவசாயத்தை மையப்படுத்தி 15000 தொழில்சார் பதிவுகள் உள்ளன. 15000 விவசாயம் சார் தொழில்துறை, மொத்தமாக 4.5 லட்சம் பேருக்கு வேலையையும் வழங்குகின்றது.

(PR)



# குப்பை மேடாகிய VAL-DE MARNE

**பி**ரான்சின் வல்-டு-மார்ன் மாவட்டத்தில் பெரிய அளவில் குப்பைகள் கொட்டப்பட்டுள்ளது. அதாவது 200 மீற்றர் நீளத்தில் 30 மீற்றருக்கும் உயரமாக 150 000 தொன் வரையில் குப்பைகள் உள்ளதாகவும் கடுமையான வெயில் காரணமாக இக் குப்பை மேடு இலகுவாகத் தீப்பிடித்து எரியத் தொடங்கியதாகவும் தெரியவந்தது.

குப்பைகளை அகற்றும் LGD என்ற நிறுவனமே இக் குப்பை மேட்டை உருவாக்கியதால் அதன் மீது கிறித்தய் (Créteil) நீதி மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. குப்பைகளை அகற்றும் இந் நிறுவனம், அனுமதி இல்லாமல் இக் குப்பைகளைக் கொட்டியுள்ளதாகவும் நெருப்புப் பிடித்த பின்னர்தான் இவ்விடயம் தெரியவந்துள்ளது என்பதுவும், நம்பிக்கை அற்ற அறிக்கைகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நெருப்புப் பிடித்தபின்னர் ஏற்பட்ட புகையும், மணமும் 5 கிலோமீற்றர் சுற்று வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு கண்களிலும் நாசியிலும் எரிவை உண்டுபண்ணியதாக மக்கள் தெரிவித்தனர்.

யூன் 1ம் திகதி தீப்பிடித்துக் குப்பை மலை எரியத் தொடங்கிய பின்னர் குப்பை மேட்டை தீயணைப்புப் படையினர் நெருங்க முடியாது திணறினர். குப்பை மேட்டை நெருங்குவதற்கு வழி ஏற்படுத்து வதற்காக வரவழைக்கப்பட்ட புல்டோசரின் (Bulldozer) சாரதி இப்படி ஒரு நிலமையில் தனது வாழ்நாளில் தான் வேலை செய்யவில்லை என்று குறிப் பிட்டுள்ளார். குப்பை மேட்டின் மேல் பகுதியில் வெப்பநிலை 70°C ஆகவும் குப்பையின் ஆழமான பகுதியில் 300°C ஆகவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 72 தீயணைப்புப் படையினர் 32 இலட்சம் லீட்டர் தண்ணீர் பாய்ச்சித் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இதன் பின்னர் இந்த இடத்தை பொலிஸ் ஆணையகம் தொடர்ந்து தண்ணீர் தெளிப்பதற்காகத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

150 000 தொன் குப்பையால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பைத் தவிர்க்க ஆரம்பத்தில் தொன்னுக்கு 1 யூரோ படி 150 000 யூரோக்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. அரச பணியினர் பாராமுகத்துடன் இருப்பதாகவும் அங்கு வாழும் மக்கள் கண் எரிவுடனும் நாசி எரிவுடனும் பிரச்சினையின் தீர்வுக்காக 2012 வரை காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

(YB)

## காளானின் மருத்துவக் குணங்கள்

காளான் இதயத்தைக் காக்கும் அற்புத உணவு.
இரத்தத்தில் கலந்துள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.
காளான்கள் மனித உடலிலுள்ள நோய் எதிர்ப்புத் தொகுதியில் நிணநீர் குழியங்களின் தொழிற்பாட்டை ஊக்குவித்து வெண்கலங்கள் அதிகளவில் உருவாக துணைபுரிகின்றன.
மூட்டு வாதம் உடையவர்களுக்கும் சிறந்த நிவாரணியாகும் மற்றும் மலட்டுத்தன்மை, பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்கள் போன்ற வற்றைக் குணப் படுத்துகின்றது.



தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்று நோய் தடுக்கப்படுகின்றது!
இதற்கு மேல் என்ன வேண்டும் உங்களுக்கு. நன்றாகச் சாப்பிடுங்கள்!!




## HARRY POTTER

இறுதிப்பாகம் வெளிவிந்துவிட்டது. பிரித்தானிய எழுத்தாளர் J. K. Rowling இன் நாவலை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டதே இப்படம். இதன் முதலாவது தொடர் 2001 இல் வெளிவந்தது. எட்டு மாபெரும் தொடர்களிற்குமான பட்ஜெட் எவ்வளவு தெரியுமா? 1,155,000,000 அமெரிக்க டொலர்கள். இதுவரை ஏழு படங்களிலிருந்து கிடைத்த மொத்த வருவாய் 7.023.518.142 டொலர்கள். உலகம் முழுவதிலும் அதிக வருவாய் ஈட்டிய தொடர் இதுதான்.

## என் கிறுக்கல்

✀ என்னை
பிடித்திருக்கின்றதென்று
நீ வந்தாய்
வேறு பெண்ணை
பிடித்திருக்கின்றதென்று
நீ போனாய்
உண்மையில்
என்னை பிடித்தது
பைத்தியமே

✀ எப்போதுமே உன்
நினைவென்றாய்
என் பிறந்தநாளையே
மறந்து..

*Aji*

## ஐரோப்பியர்களுக்கு பிடித்தமான கார்



இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களிலும் ஐரோப்பாவில் கார் விற்பனையில் 2.1 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்கிறது ACEA (European Automobile Manufacturers' Association). இதன்படி இவ்வாண்டின் கடந்த 6 மாதங்களை ஒப்பிட்டு ஐரோப்பியர்களால் அதிகம் விரும்பப்படும் கார்களில் முன்னணியில் இருப்பவற்றை பட்டியலிட்டிருக்கிறது இவ் அமைப்பு. Renault ரக கார்கள் 11,6 % வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

ஐரோப்பியர்களின் கார் தெரிவு

1. Volkswagen (12%)
2. Ford (8,1%)
3. Renault (7,9%)
4. Opel/Vauxhall (7,6%)
5. Peugeot (7,2%)
6. Citroën (6%)
7. Fiat (5,5%)
8. Audi (4,9%)
9. BMW (4,6%)
10. Mercedes (4,1%)

## ஏழை படும் பாடு



பிரான்சில் 19ம் நூற்றாண்டின் பிரபல எழுத்தாளரான Victor Hugo இனால் எழுதப்பட்டு 1862 ஆம் ஆண்டு வெளிவந்தது. பல்சுவை அம்சங்களைக் கொண்ட இந் நாவல் வெளிநாடுகளிலும் பிரபல்யம் பெற்றது. 1950களில் ஏழைபடும் பாடு என்ற இந்தியத் தமிழ் திரைப்படம் இந்நாவலை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டது.




## கண்மணியே கண்ணுறங்கு..



பெண்கள் தினமும் இரவில் ஏழு மணி நேரம் தூங்குவது அவசியம். இல்லையெனில் கண்கள் சோர்ந்து உடல் நிலை பாதிக்கும். ஆனால் இது ஆண்களுக்கு பொருந்தாது. குறைந்த நேரத் தூக்கம் குறைந்த வயதிலியே இறப்பை ஏற்படுத்தும். தூக்கம் இல்லாத பெண்கள் உடல், உளரீதியாக ஆண்களை விட அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். ஆணோ, பெண்ணோ 7 மணி நேரத் தூக்கம் குறையும்போது, என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என்பதை அறிந்தால் அதிர்ச்சியடைந்துவிடுவீர்கள்... தூக்கக் குறைவால் முதலில் ஜீரணக்கோளாறு ஏற்படும், அடுத்து தலைவலி வரும். பசியோடு உடல்வலியும் கூடும். உடல் வீங்கும் பிரச்னை ஏற்படலாம். அடிக்கடி சளிபிடிக்கும், ஜூரம் வரும்...பின் அதன் தொடர்ச்சியாக பிளட்பிரஸர்,
இதய நோய் போன்ற பெரிய நோய்கள் வரும். முக்கியமாக மன அழுத்தம் ஏற்படலாம்...

❦ தன்மானமும் மரியாதையும் உன் நாக்கின் நுனியில் தான் இருக்கிறது....

❦ தைரியமாய் இரு.... வலிமை வாய்ந்த இயற்கை உனக்கு துணை இருக்கும்....

– பொன்னியின் பக்கம் –

# BAC பரீட்சையின் பின்னர் . . . .

2011 ம் ஆண்டு Bac பரீட்சைக்கு பிரான்ஸில் 6 54 548 பேர் தோற்றியிருந்தனர். இதில் Bac Générale (பொது) 76,8 %, Bac Pro (தொழிற்பயிற்சி) 67,9 % சித்தியடைந்துள்ளனர். Bac générale இல் உள்ளடங்கிய விஞ்ஞானப்பிரிவில் (Bac-S) 79,8% மாணவர் சித்தி அடைந்துள்ளனர்.

Bac பரீட்சைக்கு தோற்றியவர்கள் பிரெஞ்சு மொழிக்கான பரீட்சையை முதல் வருடத்திலேயே எழுதுகின்றனர். இந்த ஆண்டில் 4 1/2 இலட்சத்திற்கு அதிகமானோர் Bac பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். 6 1/2 கோடி பிரெஞ்சு மக்கள் உள்ள நாட்டில் 100 பேருக்கு ஒருவர் தோற்றியுள்ளார். 20 இற்கு சராசரியாக 10 புள்ளிகள் எடுத்தவர்கள் சித்தியடைகின்றனர். அண்ணளவாக 500 இலங்கைத் தமிழர் இந்த ஆண்டில் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

Bac பரீட்சையில் சித்தியடைந்த 90% ஆனோர் மேல் நிலைக் கல்வியைத் தொடரவே முயல்கின்றனர். இவர்களுள் ஒருசாரர் கல்வியைத் தொடர முடியாமல் இடை நடுவில் விலகிவிடுகின்றனர். Bac பரீட்சைமுடிந்த பின்னர் இரண்டு ஆண்டுகளால் முடிகின்ற பல துறைகள் இருக்கின்றன. அவற்றுள் BTS (Brevet de Technicien Supérieur) மற்றும் DUT (Diplôme Universitaire de Technologie) என்பன பிரபல்யமிக்கவையாகும். இவற்றுள் கணக்கியல், பொருளாதாரம், காப்புறுதி, வங்கி, போன்ற பல துறைகளுக்கு செல்லமுடியும். DUT பகுதிக் கல்வி உயர் நிலைப் பள்ளி (Lycee) வழியாகவும் பல்கலைக்கழகம் வழியாகவும் கற்பிக்கப்படுகின்றது.

பரீட்சையின் பின்னர் பிரான்ஸில் கல்வி நிலையங்கள் இளமாணிப் பட்டம் (L-Licence) முதுமாணிப்பட்டம் (M-Master) மற்றும் (D-Doctorat) என்பன பொதுவாக இருக்கின்றன. இதில் Licence 3 வருடங்களிலும் Master 5 வருடங்களிலும் Doctorat 8 வருடங்களிலும் நிறைவு பெறுகின்றன. ஆனால் இவை அனைத்திற்கும் ஆண்டு தோறும் பரீட்சைகள் உள்ளன.

## மருத்துவக்கல்வி

மருத்துவத்துறையில் கல்வி கற்போரான மருந்தாளர்கள் (Pharmaciens) 5 வருடமும் பல் மருத்துவர்கள் (Dentistes) 6 வருடங்களும் பொது வைத்தியர்கள் (Médecin Généraliste) 9 வருடங்களும் வைத்திய நிபுணர்கள் (Médecin Spécialiste) 11 வருடங்களும் கல்வி கற்று தங்கள் கல்வியை பூர்த்தி செய்கின்றனர். இவர்கள் யாவரும் முதலாவது ஆண்டு முடிவில் போட்டி பரீட்சைக்கு தோற்றி அனுமதி பெற்றவர்கள் மாத்திரம் கல்வியைத் தொடர முடியும். 2010ம் ஆண்டு போட்டி பரீட்சையின் பின்னர் 7000 பேர் மருத்துவக்கல்விக்கு தகுதி பெற்றுள்ளனர். மருந்தாளர் கல்விக்கு 3040 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2011ம் ஆண்டில் இருந்து இராணுவ மருத்துவக்கல்லூரி ஒன்று லியோன் (Lyon) நகரில் ஆரம்பிக்கப்பட்டு 600 மாணவர்கள் வருடாந்தம் அனுமதிக்கப்படுகின்றனர். கல்வியை முடித்து வெளியேறும் மருத்துவர்கள் தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை பிரிவுகளில் மருத்துவர்களாக பணியாற்ற உள்ளனர்.




## பொறியியற் கல்வி

பிரான்ஸில் பொறியியலாளர்கள் பல்வேறு வடிகட்டல் பரீட்சைகளின் பின்னர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு பகுதியினர் Bac பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழகம் சென்று இரண்டாம் வருடத்தின் பின்னர் சிறந்த புள்ளிகள் அடிப்படையில் பொறியியற் துறையில் தொடர்வதற்கு அனுமதிக்கப் படுகின்றனர். இரண்டாவதாக ஆயத்த வகுப்பிற்கான பெரிய கல்லூரிகளில் (CPGE-Cours Préparatoires aux Grandes Ecoles) இரண்டு ஆண்டு கல்வியின் பின்னர் இடம் பெறும் போட்டிப் பரீட்சையின் பின்னர் பொறியியற் கல்லூரிக்கு உள்வாங்கப் படுகின்றனர்.

CPGE போன்ற ஆயத்த வகுப்பிற்கான பெரிய கல்லூரிகளில் முன்னணியில் வந்த மாணவர்களிடையே மீண்டும் தனியான போட்டி பரீட்சைகள் வைத்து பிரபல்ய பொறியியற்கல்லூரிகளான சுரங்க பொறியியலாளர் (Ecole de Mines) பாலம் மற்றும் கட்டுமானப் பொறியியலாளர் (Ecole des Ponts et Chaussées) தொலைத்தொடர்பு (Ecole de Telecom) ஆகிய மிகவும் முன்னணியில் உள்ள பொறியியற் கல்லூரிகள் மாணவர்களை உள்வாங்குகின்றன. இந்த முதல் 10 கல்லூரிகளும் 4500க்கு மேற்பட்ட மாணவர்களை எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்கின்றது.

இவற்றிற்கும் மேலாக பொலிரெக்னிக் (Poly technique) என அழைக்கப்படும் உயர் கல்லூரி (Grande Ecole) மிக முன்னணியில் உள்ளதாக பிரபல்ய சஞ்சிகை (L' Etudiant) எத்தித்தியன் தெரிவிக்கின்றது. இக்கல்லூரி வருடாந்தம் 500 மாணவர்களை உள்வாங்குகின்றது. இக் கல்லூரிதான் பிரான்ஸின் முதல் தர கல்லூரியாக உள்ளதென்று தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக் கல்லூரியில் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர் ஒருவரும் பொறியியலாளர் பட்டம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முன்னாள் பிரான்ஸ் ஜனாதிபதி ஜிஸ்காட்டிஸ்ராங் (Valéry Giscard d'Estaing) அவர்களும் இக் கல்லூரியிலேயே பொறியியற்துறைப் பட்டம் பெற்றுள்ளார்.



## கலை, சமூக விஞ்ஞானம்

அத்துடன் பாரிஸில் சயன்ஸ்-போ (Sciences Po) என்ற பெயரில் 1872ம் ஆண்டில் இருந்து அரசியல் ஆய்வு நிறுவனம் பாரிஸ் (Institut d' Etude Politique de Paris) இயங்கி வருகின்றது. இக் கல்லூரியில் 9000 மாணவர்கள் கல்விகற்கின்றனர். அவர்களில் 42% ஆன மாணவர்கள் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

இங்கு சமுகவியல், தத்துவம், அரசியல் - பொருளாதார விஞ்ஞானம், சர்வதேச தொடர்புகள், புவியியல் போன்றவை பாடங்களாக உள்ளன. அத்துடன் கலைப்பிரிவின் கீழ் (Bureau des Arts) நாடகத்துறை, ஓவியம் மற்றும் இதழியல் (Journalisme) என்பனவும் பயிற்றுவிக்கப்படுகின்றது. இவற்றைப் போன்று பிரான்ஸ் முழுவதும் நூற்றுக்கு மேற்பட்ட பெரிய கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் பல கிளை களுடன் இயங்கி வருகின்றன. இந்த உயர் கல்லூரிகளைப் பற்றிய முழு விபரங்கள் தெரிந்து கொள்வதற்கே ஒர் துறை தேவைப்படும் என்ற அளவிற்கு உயர் கல்லூரிகள் பிரான்சில் நிறைந்து காணப்படுகின்றன.

Bac பரீட்சையில் சித்தியடைந்த நிலை மாணவர்கள் தங்கள் பகுதியில் உள்ள பல்கலைக்கழகத்தில் அனுமதி கேட்கும் போது மறுக்காமல் இடம் வழங்க வேண்டும் என்பது பிரான்ஸ் சட்டமாகும். இதன் காரணமாக பல்கலைக்கழகத்திற்கு வெளியில் பெரிய கல்லூரிகளில் (Grands Ecoles) இருந்தும் பல்வேறு நிபுணர்கள் உருவாக்கப்படுகின்ற சூழ்நிலை உள்ளது.

எனவேதான் மருத்துவத்துறை தவிர்ந்த மற்றைய துறைகளுக்கு பல்கலைக் கழகங்களை விடுத்து பெரிய கல்லூரிகளை நோக்கி பிரெஞ்சு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தயார்படுத்தி வருகின்றனர். (YB)


பாரிஸ் மாணிக்கவிநாயகர் 16வது தேர்த்திருவிழா 28.08.2011



RTM பிறதேர்ஸ் வழங்கும் 18வது கலைத்தென்றல் 24.09.2011




# வடைமணமும் Chanel 5ம்




சின்னட்டுக்கதை

எனக்கு வாசனைத்திரவியம்மீது ஓர் அலாதி பிரியம் இருந்தது. நல்ல மெல்லிய இதமான வாசனை எனக்குப்பிடித்திருந்தது. பிரான்ஸ் வந்த ஆரம்ப காலங்களில் நான் பெரிய கடைகளிற்குப் போய் விதவிதமான வாசனைத்திரவியங்களை முகர்ந்து பார்த்து திருப்தியடைவதுண்டு. காலஞ்செல்ல சில சென்ற் போத்தல்களை நானும் விலைக்கு வாங்கிப் பாவித்து வந்தேன். ஆனால் அவை எனக்கு திருப்தியானதாய் இருக்கவில்லை.

அநேகமானவை மூக்கைத்துளைத்தெடுத்தன. இந்த வாசனை என்னைவிட பிறரை அதிகந் தொந்தரவு செய்யலாம் என்ற பயமும் கவலையும் எனக்கிருந்தது. இதனால் நான் அவற்றைத் தவிர்த்துக்கொண்டேன். நல்ல இதமான வாசனை என்னையும் சாந்தப்படுத்தி தூய்மையாக்குவதோடு சூழஉள்ளவர்களையும் அந்நிலைக்கு கொண்டுவரும் என்று நம்பினேன். வயது ஏற ஏற எனக்கு சாந்த குணம் அதிகம் தேவைப்பட்டது. நான் நேரம் கிடைக்கும்போது புதிய புதிய சென்ற் கடைகளெல்லாம் ஏறி இறங்கினேன். எனக்குப் பிடித்தவை அதிகம் விலையாயிருந்தன. இலங்கைக் கணக்கிற்குப் பெருக்கிப்பார்த்துவிட்டு விட்டுவிட்டேன். என்னுடைய இந்த ஜீவகாருண்ய கஞ்சல் போக்கு என் நண்பர்களுக்குத் தெரியவர அவர்கள் வருத்தப்பட்டார்கள். என்னுடைய பிறந்தநாள் பரிசாக விலை உயர்ந்த சென்ற் போத்தல் ஒன்றை பரிசளித்தார்கள். எனக்கு கிடைத்த பரிசுப்பொருட்களில் மிக உயர்வாக அதைக்கருதினேன். எனது நண்பர் களிடமிருந்தே அந்த நறுமணம் வீசுவதாக உணர்ந்தேன்.

மறுநாட்காலை குளித்து, அழகாய் உடுத்தி அந்த நறுமணத்தை என்மீது விசிறி விட்டு வேலைக்குச் சென்றேன். அதிலும் குறிப்பாக வீட்டுச் சமையல் மணம் என்னில் தொற்றிக்கொள்ளாதவாறு மிக மிக அவதானமாக நடந்து வீட்டைவிட்டு வெளியேறினேன். என்னில் ஒரு புத்துணர்வு. புது உற்சாகம். காற்றில் மிதப்பதாய் உணர்ந்துகொண்டேன். அந்த நறுமணம் உண்மையில் என்னில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரத்தான் செய்தது.

ஆனால் நான் ரெயின் ஏறி சில நிமிடத்திற்குள்ளேயே எல்லாம் போய்விட்டது. ரெயின் சனநெரிசலால் நிரம்பி வழிந்தது. பலவிதமான வாசனைகள் ஒன்றை யொன்று விழுங்கின. வியர்வை நெடி அருவெருப்பைத்தந்தது. அதையும் மீறி, ஒரு சின்னஇடைவெளிக்குள்ளால் மூக்கைத்துளைத்தபடி வந்து நிமிர்ந்தது ஒரு வடை வாசனை. எனக்கு "ஸ்ருக்" என்றது.
சுற்றும் முற்றும் தேடினேன். யாரையும் காணவில்லை. அடுத்த தரிப்பில் ரெயின் நிற்க கொஞ்சம் காற்று வந்தது. வடைமணம் இன்னும் அதிகமானது. நான் தேடியது அதிகதொலைவில் இருக்கவில்லை. எனக்குப்பக்கத்தில் என் காலடியிலேயே கிடந்தது. அருகில் எட்டுவயது மதிக்கத்தக்க ஒரு தமிழ்ச்சிறுமியும் தாயாரும் நின்றுகொண்டிருந்தனர். வடைகள் நிரம்பிய பொதி தாயின் கையிலிருந்தது. சிறுமியின் முகம் கறுத்திருந்தது.

"அம்மா இண்டைக்கு கட்டாயம் வாங்கித்தரவேணும்" என்று சிணுங்கிக்கொண்டிருந்தாள் அவள். ஏதோ விளையாட்டுச்சாமான் ஒன்றுக்காக இருக்கவேண்டும். அவளின் சிணுங்கலும் தாயாரின் பதிலும் அப்படித்தானிருந்தன.

"இல்ல பிள்ள இண்டைக்கு அந்தக்கடைக்கார மாமா காசுதருவார், கட்டாயம் வாங்குவம்" என்று தாய் சமாதானப்படுத்தினார்.
"நேற்றும் உப்படித்தானே சொன்னீங்கள்.."
"இல்ல குஞ்சு நேற்று அவைக்கு கடையிலே கனக்கவடை விக்கேல்ல. பாத்தனீங்கள்தானே. இண்டைக்கு எப்பிடியும் விக்குமடா..".
"நீங்கள் சும்மா என்ன பேக்காட்டுறியள்.." குழந்தைக்கு இன்றைக்கும் நம்பிக்கையிருக்கவில்லை.
நான் அவர்களைப்பார்க்க தாய் சங்கடத்தோடு என்னைப்பார்த்தார்.

வடை மணம் மெதுமெதுவாய் என்னில் ஏறிக் கொண்டிருக்க, என் நறுமணம் மெதுமெதுவாய் என்னைவிட்டுக் கழன்றுகொண்டிருந்தது. அநேகமாக பாரிஸை அடையும்போது நான் வடைமணத்தால் நிரம்பிவழிவேன் என்பதுமட்டும் எனக்குத் தெளிவாய்த்தெரிந்தது.

- அசோகா

# பிரான்ஸில் ஓய்வு பெறுவதற்கான புதிய வயதெல்லைகள்.



பிரான்ஸில் 60வயதிலிருந்து 65 வயதினர் ஓய்வு பெறத் தகுதியுடை யோர் ஆவர். 2011 ஆண்டு எடுத்த சில சட்டங்களின் அடிப்படையில் 60 வயது முதல் 62 வயதுடையவர்கள் ஓய்வு பெறத்தகுதியுடையவர்களாக கருதப்படுகின்றனர். உதாரணமாக:

- *1951 ஆண்டு பிறந்திருப்பின் 01.12.2011ல் ஓய்வு பெறலாம். (60 வயது 4 மாதம்)*
- *1952 ஆண்டு பிறந்திருப்பின் 01.09.2012 ல் ஓய்வு பெறலாம். (60 வயது 8 மாதம்)*
- *1953 ஆண்டு பிறந்திருப்பின் 01.01.2014 ல் ஓய்வு பெறலாம். (61 வயது)*
- *1954 ஆண்டு பிறந்திருப்பின் 01.05.2015 ல் ஓய்வு பெறலாம். (61 வயது 4 மாதம்)*
- *1955 ஆண்டு பிறந்திருப்பின் 01.09.2016 ல் ஓய்வு பெறலாம். ( 61 வயது 8 மாதம்)*
- *1956 ஆண்டு பிறந்திருப்பின் 01.09.2016 ல் ஓய்வு பெறலாம். (62 வயது)*

ஓய்வு பெறும் வயதை அடையும் முன்னும் சில காரணங்களுக்காக ஓய்வு கேட்கும் உரிமை உங்களுக்கு உண்டு. தனது சொந்தக் குழந்தைகள் மூன்றை பராமரித்திருந்தால் அல்லது அங்கவீனமான பிள்ளைகளைப் பராமரித்திருப்பீர்களாயினும் இவ் விதிகளுக்கு உட்படுத்தப்பட்டு ஓய்வு பெற அனுமதிக்கப்படுவீர்கள்.

பிரான்ஸ் நாட்டில் தொழில் செய்யும் பொழுது உங்களது சம்பளத்தில் ஒரு பங்கு caisse sécurité sociale க்கு அனுப்பப்படுகின்றது. அதேபோல் Complémentaire க்கும் சம்பளத்தில் சிறு பங்கு அனுப்பப்படுகின்றது. இந்தப்பணத்தையே நீங்கள் ஓய்வு பெறும் காலத்தில் பெற்றுக் கொள்வீர்கள். குறைந்த வருடங்கள் வேலை செய்தவராயின் அவருக்கு 4 அல்லது 5 பிள்ளைகள் பிறந்திருந்தால் வருடங்கள் கூட்டி கணக்கு பார்த்து ஓய்வுப் பணம் கொடுக்கப்படுகின்றது.

ஓய்வு பெறுவது தொடர்பான ஆலோசனைகளை நீங்கள் Caisse Nationale D'assurance Vieillesse இல் அல்லது உள்ளூராட்சி சபையினரிடம் பெறமுடியும். (ராசாத்தி)




பிரான்சில் சீனப் பிரசைகளுக்கு எதிராகத் தொடராக இடம்பெற்றுவரும் வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் தமக்குப் பாதுகாப்பளிக்கப்படவேண்டும் எனக்கோரியும் ஆயிரக்கணக்கான சீனமக்கள் கடந்த மாதம் பாரிஸ் நகர வீதிகளில் திரண்டிருந்தனர். சீனமக்கள் நடாத்திய இந்தப் போராட்டத்தில் 3000 சீனர்கள் வரை கலந்துகொண்டதாகப் பொலிசார் கூறும் அதேநேரம் ஏறத்தாழ 20,000 சீனர்கள் தங்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்தக்கோரி இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர் என ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

மாலை மூன்று மணியினைத் தாண்டிய வேளையில், பாரிசிலுள்ள குடியரசு சதுக்கத்திலிருந்து (République) 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் பாதுகாப்பு' என எழுதப்பட்ட பாரிய பதாதையின் பின்னால் அணிதிரண்ட ஆயிரக் கணக்கான சீனர்கள் Place de la Nation இடத்தினை நோக்கி நகர்ந்து சென்றனர்.

'அனைவருக்கும் பாதுகாப்பு', 'இணைந்திருங்கள், பாதுகாப்புடன் வாழுங்கள்' மற்றும் 'பாதுகாப்பு என்பது அடிப்படை உரிமை' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சிறிய பதாதைகளையும் பிரெஞ்சுக் கொடியினையும் கையில் ஏந்தியவாறு இந்தச் சீனர்கள் பேரணியாக நடந்து சென்றனர். இவர்களின் மத்தியில் இளந்தலைமுறைச் சீனர்கள் அதிக மிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

'குறித்த ஒருவர் ஆபத்துநிலைக்குத் தள்ளப்படாமல் இருக்கும் ஒரு நிலைதான் பாதுகாப்பு. நாங்கள் எங்களுக்கான பாதுகாப்பினைக் கோருகின்றோம். இதனைக் கேட்டுப் பெறுவது எங்களின் உரிமை. இந்த நாட்டில் எமக்கான சுதந்திரத்தினை நாங்கள் அனுபவிப்பதற்கு பாதுகாப்பு என்பது அவசியமானதொன்று' பிரெஞ்சு ஆசியக் கூட்டமைப்பு என்ற அமைப்பின் பேச்சாளர் இந்தப் பேரணியின் இறுதியில் உரையாற்றிய போது இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தப் பேரணியின்போது சீனர்களின் பிரெஞ்சு நண்பர்களும் பங்கெடுத் திருந்தனர். 'இங்கு முறையான வதிவிட ஆவணங்களின்றிப் பலர் வாழு கின்றார்கள். பிற நாடுகளைச் சேர்ந்த இவர்களிடத்தில் வன்முறையினைப் பிரயோகித்தாலும் அவர்கள் பொலிசிடம் செல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இருக்கும் குறித்த சிலரே இதுபோன்ற தாக்குதல்களில் தொடர்ந்தும் ஈடுபடுகிறார்கள்' என சீனப் பிரஜை ஒருவரைத் திருமணம் செய்திருக்கும் பிரெஞ்சு நாட்டவரான ஜீன் பியறி பியுசன் கூறுகிறார்.

மாலை 4.30 மணியளவில் Place de la Nation என்ற இடத்தினைப் பேரணி வந்தடைந்தது. இதனைத் தொடர்ந்து பேரணியில் பங்கெடுத்த சீனமக்கள் அனைவரும் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

கடந்த யூன் 20ஆம் நாளன்று பெல்விலில் (Belleville) இடம்பெற்ற இது போன்றதொரு பேரணியின் போது 8500 பேர் வரை கலந்துகொண்டதாகவும் இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மோதல்களைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக பொலிசார் நட வடிக்கையில் இறங்கியதாகவும் பிரெஞ்சுப் பொலிசார் கூறுகின்றனர்.

(NK)



# ஓரினச்சேர்க்கை

### சட்டரீதியான திருமணத்திற்கு

## பிரான்ஸ் எதிர்ப்பு

ஓரினச்சேர்க்கையாளர்கள் இயற்கையை மீறுபவர்கள், சமூகவிரோதிகள் என ஒருசாராரும் இல்லை இது தனிநபர் சுதந்திரம் அதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை என இன்னொரு சாராரும் வாதிட, எல்லையற்ற வாதம் தொடரும் நிலையிலும் சிலநாடுகள், குறிப்பாக ஸ்பெயின், நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய ஐரோப்பியநாடுகள் ஓரினச்சேர்க்கைக்கு சட்டரீதியாக அங்கீகாரம் வழங்கின. நேபாள் நாட்டில் அமெரிக்காவைச்சேர்ந்த தோழிகள் இருவர் இந்துமதச்சடங்கு முறைப்படி செய்து கொண்ட திருமணம் ஆசியாவையே ஆச்சரியங்கொள்ள வைத்தது. ஆசியாவில் முதன் முதல் நடந்த லெஸ்பியன் திருமணம் இதுவென கூறப்படுகிறது. தொடர்ந்து பிரான்சும் நீண்டகாலமாக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இவ்விவாகாரம் தொடர்பான விவாதங்களை நடத்தி வந்தது. பிரெஞ்சு மக்களில் கணிசமானோர் இதற்கு ஆதரவான கருத்துக்களைக்கொண்டிருந்தபோதும் சட்டவல்லுனர்களால் இதை தடுத்து நிறுத்த முடிந்தது.

பிரெஞ்சுப் பாராளுமன்றத்தில் அண்மையில் நடந்த வாக்கெடுப்பில் ஓரினச்சேர்க்கை திருமணத்திற்கு ஆதரவாக 222 பேரும், எதிராக 293 பேரும் வாக்களித்ததால் மசோதா மறுக்கப் பட்டது. (Mn)

## பிரெஞ்சு ஓபன் முதன்முறையாக சாம்பியன் பட்டத்தைவென்ற சீன வீராங்கனை

பிரெஞ்சு ஓபன் டெனிஸ் போட்டியில் முதன்முறையாக சீன வீராங்கனை நா லீ சாம்பியன் பட்டம்வென்று ஆசியாவிற்குப் பெருமைசேர்த்தார். உலகில் முக்கியபோட்டிகளில் ஒன்றாக பிரெஞ்சு ஓப்பன்டெனிஸ் கருதப்படுகின்றது. வெல்லும் வீரர் பெரும் தொகையான பணத்தை தட்டிச்செல்வதோடு தனது நாட்டிற்கும் பெருமை சேர்த்துக்கொள்கிறார். 1891 முதல் பிரான்சில் நடாத்தப்பட்டுவரும்இப்போட்டி டெனிஸ் அரங்கில் லண்டன் விம்பிள்டன் போட்டிக்கு அடுத்த இடத்தை பெறுகிறது. பொதுவான ஆடுகளங்கள் புற்தரையில் நடக்கும். பிரெஞ் ஓபன் மட்டும் களிமண்தரையில் நடத்தப்படுகிறது. இதுவே இப்போட்டியின் சிறப்பு. இந்த ஆட்டக்களங்களில் ஆடுவது சற்று கடினமானதும் கூட.

ஆடவருக்கான ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரரான ரபேல் நடால் 6வது




தடவையாக சாம்பியன் கிண்ணத்தை தட்டிச்சென்றார். 25 வயதை எட்டும்நடால் உலகின் முதல் தரநிலை வீரராவார். (Mn)



## அணுமின்சக்தி உற்பத்திக்கு பிரான்ஸ் 100 கோடியூரோ முதலீடு

ஜப்பானில் கடந்த வருடம் ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து உலகமே நடுங்கியது. காரணம் ஜப்பான் அணுமின் நிலையங்கள் தொடர்பான பாதிப்புத் தான். வானலைகளில் பரவிவிட்ட நச்சுப்புகைகள் உலகையே மிரட்டின. பல ஆயிரம் மைல்கள் தாண்டி பிரான்சைக்கூட இது தாக்கலாம் என நம்பப்பட்டது. இதைத்தொடர்ந்து உலகிலுள்ள அணுமின்நிலையங்களை மூடிவிடும்படி போர்க்கொடிகள் எழுந்தன. இந்தக்குரல்கள் முழுமையாக அடங்குமுன்னரே எதிர்கால அணுமின்சக்தி மேம்பாட்டு நடவடிக்கை களுக்காக பிரான்ஸ் 100கோடி யூரோ முதலீடு செய்கிறது என பிரஞ்சு அதிபர் நிக்கோலா சார்கோசி அறிவித்திருக்கிறார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் நிக்கோலா சார்கோசி, ஜப்பானிய அணுமின்நிலை பாதிப்பிற்குப்பின்னர் சில அணுமின்நிலையங்கள் மூடப் படுகின்றன. இவை அர்த்தமற்ற நடவடிக்கை எனவும் இன்றைய கால கட்டத்தில் அணுமின்சக்திக்கு மாற்றாக புதியசக்தி எதுவும் இல்லை எனவும் தெிவித்தார்.

மேலும், அவர் கருத்துத்தெரிவிக்கையில், குறிப்பாக 4வது சந்ததியினருக்கான தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக இந்நிதி ஒதுக்கப்படுவதாகவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மேலும் நிதி ஒதுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (Mn)




## ● சுவையான ஐஸ்கிறீம் நீங்களும் தயாரிக்கலாமே!

தேவையான பொருட்கள்

கயு (முந்திரிப் பருப்பு) - 1/4 Kg
அப்பிள்சாறு - 1 கப்
பால் - 1 கப்
தேன் - 3 மேசைக்கரண்டி
வனிலா - 1 தேக்கரண்டி
நன்றாகப் பழுத்த வாழைப்பழம் - 3

செய்முறை

கயுவை மிக்சியில் போட்டு மாவாக அடிக்கவும். ஓரளவுக்கு அடிபட்டதும் அப்பிள் சாறு ஊற்றி நன்றாக அடிக்கவும். அடித்த கலவையுடன் வாழைப்பழம், பால், தேன், வனிலா, சேர்த்து மென்மையானதாகும் வரை அடித்துக்கொள்ளவும்.

பின்பு பிளாஸ்ரிக் கப் இல் போட்டு குளிரூட்டியில் வைக்கவும் இரவு முழுவதும் உறையவிட்டபின் நன்றாகத் தூங்குங்கள்



நன்றாகத் தூங்கிவிட்டீர்களா? காலையில் எழுந்து பாருங்கள் உங்கள் ஐஸ்கிறீம் ரெடி.

(RS)


நிலா

நிலாவினைப் பெற்றுக்கொள்ள

**சங்கீதா அச்சகம்**
39, Bld de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

**MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**VANNI BOUCHERIE**
26, Rue Perdonnet - 75010 PARIS

**Sachi Education**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS Coiffure**
5B, Avenue Alexis Varagne - 95400 Villiers le Bel

**Sarl Varnisha Coiffure**
11, rue de l'Ouest - 75014 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse - Sarcelles

**SHAMROCK EDUCATION CENTRE**
M°: St. François Xavier (13) - M°: Montparnasse (4,12) அருகாமையில்

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris


## ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி அரங்கிற்கு வருகிறார் TAPIE



பிரான்சில் 80 களில் உச்சாணிக்கொம்பில் இருந்தவர்களில் Nanard என செல்வாக்காக அழைக்கப்பட்டவர் Bernard Tapie. பிரான்சில் வணிகம், விளையாட்டு - கால்பந்து, அரசியல், திரைப்படம் என பலதுறைகளில் ஈடுபட்டு அத்துறைகளில் பிறர் பொறாமை கொள்ளும் படி வெற்றியீட்டி செல்வந்தரான பேர்னாத் தப்பி இப்போது நாடகத்துறையில் ஆர்வம் காட்டி வருகிறார். 80 களில், பிரான்ஸ் தேசிய சைக்கிள் விளையாட்டில் La vie Claire அமைப்பின் சார்பில் Bernard Hinault ஐ ஊக்குவித்து வெற்றிவீரன் பதக்கம் பெறவும், நீஸ், மார்செய் கால்பந்து கழகத்தின் தலைவராகி அக்கழகங்கள் பல பெரிய கால்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று முன்னணியில் திகழவும் இவர் ஆற்றியதிறமை இவரை வெளியுலகத்திற்குக் காட்டியது.

ஓடாத வணிக நிறுவனங்களை வாங்கி அவற்றை இலாபகரமாக இயங்கவைத்துப் பின்னர் விற்று செல்வம் ஈட்டுவதினால் ஊடகங்களில் அடிக்கடி பேசப்படுபொருள் ஆனார். தொலைக்காட்சிகளில் தொடர்ந்து தோன்றினார். பெற்ற செல்வாக்குக் காரணமாக 1988 இல் தேர்தலில் வெற்றிபெற்றார், தொடர்ந்து 1992 இல் Mitterand அரசாங்கத்தில் நகர அபிவிருத்தி அமைச்சர் ஆனார். பின்னர், எதிர் விளையாட்டுக் கழகத்து வீரர்களை பணம்கொடுத்து வாங்கியமை, Adidas - அடிடாஸ் நிறுவனம், Crédit Lyonnais வங்கி ஆகியவற்றுடன் வழக்குகளுக்குச் சென்றமை ஆகியவற்றால் தன் பெயரைக் கெடுத்து சிறைசெல்கிற நிலைக்கு ஆளாக்கப்பட்டு காணாமல் போனார்.

வங்கி வழக்கில் தோற்ற இவர் தனது நீண்டகால நண்பரான தற்போதைய ஜனாதிபதியின் உதவியினால் பதினைந்து ஆண்டுகள் நடந்த வங்கி வழக்கில் வெற்றிபெற்று 390 மில்லியன் யூரோக்களைப் பெற்றார். 1995 இல் சிறைசென்ற இவர், 1996 இல் Hommes, femmes, mode d'emploi திரைப்படத்தில் நடித்தார். 68 வயதில், இந்த ஆண்டின் இலையுதிர் காலப்பகுதியில் Les Montagnes russes எனும் நாடகத்தில் பிரதான பாத்திரத்தில் நடிக்கிறார். (எஸ்.எஸ்)


**அண்ணாமலை பல்கலைக் கழகம்**

முன்னேற்றம் உறுதி! Progrès assuré!

1. RÉUSSISSEZ VOS PRÉPAS
எஞ்சினியர் ~ டாக்டர் ~ மருந்தாளர்
École d'Ingénieurs - Médecine – Pharmacie

பிரான்சில் மேற்படி பட்டப்படிப்புக்களுக்குரிய பாடங்களை திறமையான பிரெஞ்சுப் பேராசிரியர்கள் கொண்டு முறையாக வழிகாட்டியும் பயிற்சிப்படுத்தியும் எஞ்சினியர், மருத்துவர், மருந்தாளர் ஆகியவற்றின் போட்டிப்பரீட்சைகளுக்குத் தயார் படுத்தியும் சித்தி பெற துணைபுரிகிறோம்.

OBJECTIFS:
- Organiser le travail.
- Surmonter les problèmes méthodologiques.
- Affronter l'épreuve, concours ou examen, avec motivation et confiance.

2. SOUTIEN SCOLAIRE டியூசன் வகுப்புகள்
ÉCOLE : GS, CP, CE1, CE2, CM1, CM2, CLIN...
COLLÈGE : 6e, 5e, 4e, 3e, SEGPA...
LYCÉE : Seconde, Première, Terminale, BTS...
BAC : S,ES,L, STI, STAV,ST2S, STL,STG. ... Pro.
அனைத்துப்பாடங்களும் பிரெஞ்சு ஆசிரியர்கள் Toutes les matières scolaires

**Sachchi Education (Annamalai University)**
70, rue Philippe Girard - 75018 Paris Tél. : 01 46 07 16 00 / 01 60 28 39 12



**பிரெஞ்சிய இலக்கியத்தில் இந்திய பஞ்சதந்திரத்தின் தழுவல்**

பஞ்சதந்திரக்கதைகளும் எசோப்கதைகளும் மெசொப்பொதமியக் கதைகளை மூலமாகக் கொண்டவை என சில அறிஞர்கள் தமது ஆய்வுகள் வழி நூல்கள் எழுதியிருக்கின்றார்கள். மாவீரன் அலெக்சாண்டர் இந்தியாவை வெற்றிகொண்டதன் பின் எசோப் கதைகள் இந்தியாவுக்குப் பரவி பஞ்சதந்திரக்கதைகள் உருவாகின என கௌஸ்ரத்- Hausrath என்ற ஆய்வாளரும், மறுதலையாக இந்திய பஞ்சதந்திரக்கதைகளிலிருந்து எசோப் கதைகள் உருவாகின என எட்ஜெர்த்தொன் - Edgerton என்கிற ஆய்வாளரும் எதிரெதிரான முடிவுகளை நூல்களாக எழுதிச்சென்றிருக்கின்றனர்.

**ஆஃப்கானிஸ்தானில் முடமாக்கப்படும் பிரெஞ்சுப் படைவீரர்கள்**

அல் - கய்தா பயங்கரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவுடன் சேர்ந்து பிரெஞ்சிய இராணுவமும் கடந்த பத்து ஆண்டுகளாக ஆஃப்கானிஸ்தானில் இருப்புக்கொண்டுள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்த பழைய செய்தி. 2001 இலிருந்து கடந்தவாரம் வரை பயங்கரவாதப் போரில் 70 பிரெஞ்சு இளம் இராணுவ வீரர்கள் உயிர்ப்பலி ஆகியுள்ளனர். இதுவரைக்கும் 500 வீரர்கள் அங்கவீனர்களாகி வாழ்க்கையை இழந்துள்ளனர்.



# தேன்கூடு

பேராசிரியர் ச. சச்சிதானந்தம்

## பதிவுகள்

மேசொப்பொதமியக் கதையான கழுகும் பாம்பும் எனும் நீதிக்கதையை விஷ்ணுசர்மா காகமும் பாம்பும் எனவும், எசோப் கழுகும் நரியும் எனவும் எழுதினர் என கௌஸ்ரத் என்ற அறிஞர் Archilochus என்கிற நூலில் நிறுவினார். மேலும், சுமேரியப் பறவையும் மீனும், எருதும் குதிரையும், நரி - நாய்- ஓநாய் - சிங்கம் ஆகிய கதைகளின் தழுவல்கள் இந்தியக், கிரேக்கக் கதைகளில் உள்ளன இவர் ஆதாரத்துடன் தெரிவித்தார்.



**59 வயதான அரவாணியும் 27 வயதான பெண்ணும் வாழ்க்கை ஒப்பந்தம்**



Stéphanie அல்லது Stéphane என்கிற 59 வயதான அரவாணியும், Elise என்கிற 27 வயதான இளம்பெண்ணும் குடியரசு சட்டத்தின் பிரகாரம் Nancy மாநகரசபையில் திருமணம் செய்து கொண்டனர். ஒரே பாலினத்தவர் கல்யாணம் செய்துகொள்வது பிரான்சில் சட்டரீதியாக தடைசெய்யப் பட்டிருக்கிறது. ஆயினும் ஒரே பாலினர் திருமணம் செய்வது சட்டப்படி தடைசெய்யப்பட்டிருப்பினும் ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் சேர்ந்து இணையராக வாழ்ந்து வருவது கண்கூடு.

தான் பெண்ணாக மாறுவதற்கான அறுவைச்சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக கூறும் Stéphane என்கிற ஆண் அதற்குரிய சான்றிதழ்களை சட்டத்தின் முன் சமர்ப்பிக்க மறுத்திருக்கிறார். ஸ்தெ/பென் அல்லது ஸ்தெ/பெனி - எலிஸ் சிவில் திருமண நிகழ்வில் லேஸ்பியென், கே, பால்மாறிகள், அரவாணிகள் (அலி, பேடி) களும் கலந்துகொண்டனர்.



**ஷாஜகானும் காதலும்**

குறைவாக அறியப்பட்ட உண்மைகள்:

- ஷாஜகானின் ஏழு மனைவிகளில் நான்காவது மனைவி மும்தாஜ்
- மும்தாஜை மணப்பதற்காக அவளின் கணவனைக்கொன்றார் ஷாஜகான்
- தனது 14 வது பிரசவத்தின் போது இறந்தார் மும்தாஜ்
- மும்தாஜின் தங்கையை மனைவியாக்கிக்கொண்டார் மன்னர் ஷாஜகான்.
- மும்தாஜ் + மஹல் = தாஜ்மஹால்
- மும்தாஜின் உண்மைப்பெயர் அர்ஜுமான்ட் பானு பேகம்



**கோடையில் சூடை மீன் திருவிழா**

**Les Festines de Sardines**



பிரான்சின் Martigue, Fos-sur-Mer பகுதிகளில் ஜுலை, ஓகஸ்ற் மாதங்களில் சூடை மீன் திருவிழாக் கொண்டாட்டம் - Les Sardinades வருடந்தோறும் குடும்ப - சிநேகிதர்கள் பொழுதுபோக்கு விழாவாக இடம்பெறுவது வழக்கம். இப்பொழுதுபோக்கு விழாக்கள் இடம்பெறும் பகுதியைப் பொறுத்து Les Sardinades de Port – de – Bouc, Les Sardinades de Marigues, Les Festines de Fos – sur - Mer vd அழைக்கப்படுகின்றன.

இத்திருவிழாவின் போது, வாரநாட்களில் சுமார் 1000 பேரும், வாரவிடுமுறை நாட்களில் 2000 பேரும் கலந்துகொண்டு சூடை மீன், மட்டி மீன் மற்றும் கிடைக்கும் மீன்களை பச்சையாகவும், பதப்படுத்தியும் எலுமிச்சம் பழம், ரோஸ் வைனுடன் சாப்பிடுவது முக்கிய அம்சம். Port – de – Bouc இல் கோடைகாலப்பகுதியில் கிட்டத்தட்ட 90 000 பேர் கலந்துகொள்வார்கள். மீன்கள் சுட்டு வாட்டி சாப்பிடப்படுவது, பார்பெக்யூ செய்யப்படுவது எங்கணும் காணலாம்.




பிரான்சில் 1992 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தில் இருந்து மீளப்பெறப்படும் புள்ளிகள் சட்ட மூலத்தின்படி 2010ம் ஆண்டு 10139522 புள்ளிகள் வாகன ஓட்டுனர்களின் சாரதிப்பத்திரத்தில் இருந்து மீளப்பெறப்பட்டுள்ளது. இது 2009ம் ஆண்டைவிட 9,3% அதிகமாகும். குறிக்கப்பட்ட வேகத்தைவிட 20கிலோமீற்றர் வரை கூடுதலான வேகத்தில் சென்று தமது புள்ளிகளை இழந்தவர்கள் 42,62% மும் 20 கிலோமீற்றர் வேகத்தைவிட அதிகூடிய வேகத்தில் சென்று புள்ளிகளை இழந்தவர்கள் 15,21% மும் ஆகும். இதனைவிட குடிபோதையில் 9,46% ஆனவர்கள் புள்ளிகளை இழந்துள்ளனர். இவர்கள் 0.8கிராமிலும் அதற்கும் கூடுதலாகவும் போதையில் இருந்துள்ளனர். கைத்தொலைபேசியின் உரையாடல்களால் 8,92% ஆனவர்கள் தமது புள்ளிகளையும் 77% ஆனவர்கள் சிவப்பு சமிக்ஞை விளக்குகளில் நிறுத்தாத காரணத்தினாலும் புள்ளிகளை இழந்துள்ளார்கள். இதனைவிட பாதுகாப்பு பட்டி அணியாததாலும் சிலர் புள்ளிகளை இழந்துள்ளனர். கடந்தவருடம் வீதிகளில் ஏற்பட்ட விபத்துக்களினால் 3994 பேர் இறந்துள்ளதாக தெரிவித்துள்ள வீதிப்போக்குவரத்து ஆணையகம் முன்பைவிட இறப்புவிகிதம் குறைவடைந்துள்ளதாக தெரிவித்துள்ளது. இதற்குக்காரணம் வீதியோரங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமராக்கள் எனவும் கூறியுள்ளது. வாகன ஓட்டுனர்கள் தமது சாரதி அனுமதிப்பத்திரத்தை இழக்க விரும்பாத காரணத்தினால் தற்பொழுது அவதானமாக வாகனங்களை ஓட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றில் 12 புள்ளிகள் இருக்கின்றது. ஓட்டுனரின் தவறுகளைப் பொறுத்து அதிலிருந்து 1,2,3 என புள்ளிகள் மீளப் பெறப்படும். முழுப்புள்ளிகளையும் இழந்தவர்களிடம் இருந்து ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்படும். 16.07.2011 அதிவேகசாலை 16ல் 130 கிலோமீற்றர் வேகத்தில் செல்லவேண்டிய இடத்தில் 214 கிலோமீற்றர் வேகத்தில் Auto Ecole Moniteur ஒருவர் தனது காரை செலுத்தியுள்ளார். இவருக்கு தண்டப்பணமாக 1500 யூரோக்களும் பெறப்படும் எனவும் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

- வரதன்




இன்றைய இயந்திர உலகில் மனஅழுத்தமும் மிகப்பெரும் நோயாக உருவெடுத்து வருகிறது. மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டு அந்தச் சிக்கலிலிருந்து வெளிவரமுடியாது பலரும் திண்டாடிவரும் நிலையில் மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டோர் அதிகமுள்ள நாடாக பிரான்ஸ் உள்ளது என ஐக்கியநாடுகள் சபையின் சுகாதார நிறுவனம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இவ்வறிக்கை வெளிவந்ததும் பிரான்சில், அரச எதிர்ப்பாளர்களும், தீவிர சமூக சிந்தனையாளர்களும் அரசை கடுமையாக விமர் சிக்க ஆரம்பித்துள்ளனர்.

பிரான்சில் 21சதவீத மக்கள் மனஅழுத்தத்தில் தவிக்கிறார்கள் என்கிறது இவ்வறிக்கை. மேலும் அமெரிக்காவில் 19,2 வீதமானோரும், பிறேசிலில் 18,4 நெதர்லாந்தில் 17,9 பெல்ஜியத்தில் 14,1 இத்தாலியில் 9,9 ஜேர்மனியில் 9,9 தென்னாபிரிக்காவில் 9,8 இந்தியாவில் 9 சீனாவில் 6,5 வீதமானோர் மனஅழுத்தத்தில் பாதிக்கப்படுவதாக இவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. (Mn)




பாரிசில், சைக்கிள் சேவை போல காரும் சேவைக்கு வருகிறது. செப். 30 முதல் 2 மாதங்களுக்கு பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டு டிச.1 முதல் சேவைக்குவருகிறது. (LS)





லாச்சப்பலில் சங்கீதா அச்சகம்

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் நாடுங்கள்!

Tél./Fax : 01 44 72 08 94

E-mail: sangeethafrance@yahoo.com




39 Bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE